எமது உடம்புக்கு
சிறந்த பிரதானம்;
ஆகவே
சித்த மருத்துவ முறைப்படி
தயாரிக்கப்பெற்ற
ஆனந்தம்
சீயாக்காய் பவுடர்
என்று கேட்டு வாங்குங்கள்
ஸ்ரீ சச்சிதானந்தா
கவுஞ்சியம்
வைதீ. (7485)

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

எமது உடம்புக்கு
சிறந்த பிரதானம்;
ஆகவே
சித்த மருத்துவ முறைப்படி
தயாரிக்கப்பெற்ற
ஆனந்தம்
சீயாக்காய் பவுடர்
என்று கேட்டு வாங்குங்கள்
ஸ்ரீ சச்சிதானந்தா
கவுஞ்சியம்
வைதீ. (7485)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 17 வெள்ளிக்கிழமை (01 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 215

முன்கூட்டி நடத்துவதா? அல்லது ஒத்திவைப்பதா?

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைத் திகதியை மாற்றுவது குறித்து பரிசீலனை

மாற்றுத் திட்டம் விரைவில்

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை அத்திகதிக்கு முன்னதாக நடத்தப்படுமா அல்லது ஒத்தி வைக்கப்படுமா என்பது பற்றி இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படவிருக்கிறது.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இத்தகவலை வெளியிட்டார்,

எதிர்வரும் ஆகஸ்ட் 16 இல் பொதுத் தேர்தல் நடைபெற விருப்பதால் இப்பரீட்சையை ஒத்திவைப்பதா அல்லது முன் கூட்டியே நடத்துவதா என்பது குறித்து மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்கள் மற்றும் கல்விமான்களுடன் தாம் ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் —

மாணவர்களின் 'நலன் கருதி மாணவர்களுக்கு எந்தவித அசௌகரியங்களையும் ஏற்படுத்தாமல் இப்பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்றும் 'பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

'இப்பரீட்சையை நடத்துவதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை நான் தயாரித்துள்ளேன். இந்தத் திட்டத்தை நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பேன். எனது திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், புதிய திட்டம் பற்றியும் இப்பரீட்சை எவ்வாறு நடைபெறும் என்பது குறித்தும் நான் அறிவிப்பேன்' — இப்படி பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார் என்று அரசக் கட்டுப்பாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

(இ-எ-6)

ஐ. தே. கவுக்கு வாக்களிக்க ஹேமா கோரிக்கை

ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைமையி- மேற் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிர்வரும் தேர்தலில் மாபெரும் வெற்றியை மக்கள் சமர்ப்பித்தாகவேண்டும்.

திருமதி ஹேமா பிரேமதாஸா, தங்காலை விகுடாவெல்லையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்னாள் வேண்டுகோள் விடுத்தார். (இ-எ-6)

ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில்

யானை சின்னத்தில் இ. தொ. கா போட்டி

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் யானைச் சின்னத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடும்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற உயர் நிலைப் பேச்சுவார்த்தைகளின்போது இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டிருப்பதாக நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ-6)

பொதுச் செயலாளர் பதவி பறிபோனது

செல்லச்சாமி நீக்கம்! தொண்டா பேரன் நியமனம்

கொழும்பு, ஜூலை 1

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

அந்த இடத்துக்கு தலைவர் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் நியமிக்கப்பட்டார்.

இ. தொ. காவின் நிர்வாக சபையும், தேசியசபையும் இம்முடிவுகளை எடுத்துள்ளன.

திரு. ஆறுமுகம் தொண்டமான் இதுவரை இ. தொ. காவின் நிறைவேற்று நிதிச்செயலாளராக பணிபுரிந்து வந்தார்.

இ. தொ. காவின் உபதலைவர் பதவியில் இருந்து மத்திய மாகாணசபை உறுப்பினரான எம். நடராசா நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு எஸ். ஏ. கந்தசாமி நியமிக்கப்பட்டார்.

புதிய நிதிச்செயலாளராக முன்னாள் நுவரெலியா எம். பி. முத்து சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-எ)

ஒஸியின் கட்சி ஐ. தே. கவுடன்

கொழும்பு, ஜூலை 1

ஒஸி அபேகுணசேகர தலைமையான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் என்றும் —

அக்கட்சியின் தலைவர் ஒஸி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஐதேக பொதுச் செயலாளர் காமினி திஸாநாயக மக்கள் கட்சித் தலைவர் சம்பிரகுணவர்த்தனை சந்தித்துப் பேசியதை அடுத்து முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.

மக்கள் கட்சியின் ஒன்பது உறுப்பினர்கள் தெற்கு, மேல் கிழக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் வன்னி மாவட்டங்களில் போட்டியிடவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் குழு

கட்சிகள் விரும்பினால் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சர்வதேச அவதானிகள் குழு ஒன்று தேவை என்று அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச கண்காணிப்புக் குழுவை வரவழைப்பது அரசியல் கட்சிகளின் வேண்டுகோளிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-எ)

வேறு நிலையங்களில் வாக்களிக்க வசதி

தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

சொந்தப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு, வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாக்காளர் ஒருவர் தனது வாக்களிப்பு நிலையம் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

இன்று மாலை அல்வாய் மேற்கில்

கரும்புலிகள் எழுச்சி குடியிருப்பு திறப்பு!

இரவு பொதுக் கூட்டமும் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமராட்சியில் இன்று கரும்புலிகள் எழுச்சிக் குடியிருப்பு ஒன்று திறந்து வைக்கப்படுகிறது.

அல்வாய் மேற்கு, கட்டை புலியடி, திக்கத்தில் இன்று மாலை 4. 30 மணிக்கு இந்த எழுச்சிக் குடியிருப்பு திறந்து வைக்கப்படும்.

வடமராட்சிக் கோட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தயா தலைமையில் திறப்புவிழா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அங்கு கரும்புலிகள் நினைவாக அறிவாலயம், பாசறை பாடசாலை, கருமபுலிகள் இல்லம் ஆகியவைகளும் திறந்து வைக்கப்படவுள்ளன.

எழுச்சிக் குடியிருப்பு திறப்புவிழாவின் பின்னர் இரவு 7. 30 மணிக்கு 'ரு கண்ணதாசன் தலைமையில் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும். தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஒ)

முச்சந்தி முரளி

கப்பல் ஒட்டிய தமிழன் இப்ப அந்திய நாடுகளில் தமிழனின் மானத்தைக் கப்பல் ஏற்றுகிறான் பாருங்கோ.....!

திருமலையில் புலிகள் தாக்குதல் விமானப்படை சிப்பாய் பலி!

திருகோணமலையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா விமானப்படை சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 8.10 மணிக்கு திருகோணமலையில் பன்மதவாச்சிக்கும் வேப்பங்குளத்திற்கும் இடையே இச்சம்பவம் இடம் பெற்றது.

ரோந்து சென்ற விமானப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

விமானப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளை வேப்பங்குளம் விமானப்படை முகாமில் இருந்து ஹெலிகொப்டர், புக்காரா விமானம் ஆகியவற்றில் உதவியுடன் பல்கல் கவச வாகனம் சகிதம் மற்றொரு ஆளி விமானப் படையினருக்கு உதவ முன்னேறி வந்தது. முன்னேறிய ஆளி மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்;

இத் தாக்குதலில் போது

(4ஆம் பக்கம் பார்க்க)

சித்தாண்டியில் ஷெல்வீச்சு; சகோதரிகள் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 1

மட்டக்களப்பு — சித்தாண்டியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் வீச்சுக்கு இலக்காகி தமிழ்ச் சிறுமிகள் இருவர் உயிரிழந்தனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த முத்துலிங்கம் கருணாநந்தி (5 வயது) அவரது சகோதரியான முத்துலிங்கம் தெயசாந்தினி (3 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

ஏறாவூர் மொறக்கொட்டாஞ்சேனை முகாமில் இருந்தே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன் சித்தாண்டியில் ஸ்ரீலங்கா படையினர் வைத்துச்சென்ற பொறிவெடியில் இரு தமிழ்ச் சிறுவர்கள் சிக்கி படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-163)

பொ.ம.ஐ. முன்னணியுடன் உடன்பாடு காணும் முயற்சியில் தினேஷ்!

வடக்கு - கிழக்கு பிரச்சினையில் கருத்து முரண்பாடு

கொழும்பு, ஜூலை 1

தேர்தல் உடன்பாடு காணுவது குறித்து மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா நேற்று சுதந்திரக் கட்சித் தலைவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுக்கள் சாதகமான நிலையில் நடந்தன என்று கூறிய அவர். திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா நாடு திரும்பிய பின்னர் அவருடன் நடத்தும் பேச்சுகளில் எதிர்வரும் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தேர்தல் உடன்பாடு காணப்படுவதற்கு முன்னர் வடக்கு — கிழக்கு பிரச்சினையில் தனது நிலைப்பாடு குறித்து சுதந்திரக்கட்சி பகிரங்கமாக அறிக்கை வெளியிட வேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தனா கேட்டுக்கொண்டார் என்றும் —

அதற்கு சந்திரிகா, 'தமிழருக்கு என்ன தேவை என்பது சுதந்திரக் கட்சிக்கு தெரியும். சுதந்திரக் கட்சி இதுகுறித்து பெரும்பாலும் ஒரு முடிவுக்கு வந்து விட்டது' என்று தெரிவித்தார் என்றும் 'தச்சண்டே லீடர்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

'இந்த நிலையில் சுதந்திரக் கட்சியுடன் தொடர்ந்து பேச்சுகள் நடத்துவதால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை' என்று தினேஷ் குணவர்த்தனா கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின்போது மேஜர் தவக்குமார் அல்லது எழிலன் என் அழைக்கப்படும் நாகராஜா தர்மராஜ் திருகோணமலையைச்சேர்ந்த வெலிங்டன் பார்த்திபன் என அழைக்கப்படும் கனபதிப்பிள்ளை கிருபைரட்ணம் ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். (இ-163)

வன்னி எம்.பி ஐ. தே. கவில்

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் வன்னி மாவட்ட எம். பியாக இருந்த எம். என் அபூபூ (கபேசை) ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்து கொண்டார் என்றும்—

எதிர்வரும் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராக அவர் போட்டியிடவிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

காவல் நிலையம் தீப்பற்றி எரிந்தது!

வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள மடுகந்த பொலீஸ் காவல் நிலையம் கடந்த ஞாயிறு இரவு திடீரென தீப்பற்றி எரிந்தது.

மின்சார ஒழுக்கே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. (ஒ-எ)

கரும்புலிகள் நாளை ஒட்டி நரோமா சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நரோமா பயணிகள் கப்பலை எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பகுதிதறை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கும்படி யாழ். அரச அதிபர் திரு. எச். மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி "கரும்புலிகள்" தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் முல்லைத்தீவு பயண ஒழுங்கில் மாற்றம் செய்யுமாறு அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சை கோரியுள்ளார்.

முல்லைத்தீவு பயண ஒழுங்கின்படி 'நரோமா' கப்பல் திருகோணமலையில் இருந்து புறப்பட்டு 5 ஆம் திகதி செல்லாயன்று பருத்தித்துறைக்கு வருவதாக இருந்தது.

ஜூலை முதல் வாரத்திலும், 4 ஆம், 5 ஆம் திகதிகளிலும் நரோமா கப்பலில் பயணம் செய்வதற்காக பணம் செலுத்தி தம்மை பதிவு செய்துவைத்தவர்களை 6 ஆம் திகதி இங்கிருந்து அனுப்ப வசதியாகவே —

அன்று நரோமா கப்பலை இங்கு அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பான பதில் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து தமக்குக் கிடைத்ததும் அது பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-5)

ஆர்ஜென்டீனா அணியின் தலைவர் விளையாட தடை!

நியூயோர்க், ஜூலை 1

ஆர்ஜென்டீனா உதைபந்தாட்ட அணியின் தலைவரான மரடோனா தொடர்ந்து உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று நடைபெற்ற போட்டி ஒன்றில் ஆர்ஜென்டீனா நைஜீரியாவை, 2-1 என்ற கோல் எண்ணிக்கை தோற்கடித்த பின்னர் 33 வயதான மரடோனா மருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்பொழுது, அவர் தொய்வு நோய்க்குப் பயன்படுத்தப்படும் போதை ஏற்படக் கூடிய தடை செய்யப்பட்ட மருந்தை உட்கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதே போன்ற குற்றச்சாட்டு ஒன்று காரணமாக 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18 மாதங்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. (இ-க-9)

டென்மார்க் தீவு ஒன்றில் 91 இலங்கைத் தமிழர்கள்

கோபன்ஹேகன் ஜூலை 1

டென்மார்க் தீவான பொன்ஹாமில் 91 இலங்கைத் தமிழ் அகதிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

எஸ்தோனிய நாட்டு மாலுமிகள் கப்பல் ஒன்றில் கொண்டுவந்த இவர்களை இறக்கிவிட்டுச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

டென்மார்க் அதிகாரிகள் இந்த இலங்கைத் தமிழர்களை தலைநகர் கோபன்ஹேகனுக்கு வெளியேயுள்ள அகதிமுகாம் ஒன்றுக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் டென்மார்க்கில் அரசியல் புகலிடம் கோரி உள்ளனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-க)

அரசுக்கு எதிரானவர்கள் எனக்கருதப்படும்

சிறையிலுள்ள முக்கியபுள்ளிகளை அங்குவைத்தே கொல்ல திட்டமாம்

கொழும்பு, ஜூலை 1

அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள இராணுவக் கப்டன் தர்மசிறி நிஸங்க, முன்னாள் இந்திராணந்த சிறைக் கோட்டாதிபதி, பக்கலை கமல் விரிவுரையாளர் அமல் ஆபேசிங்க, நுகுணு பக்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் மைக்கல் சில்வா ஆகியோரை சிறையில் வைத்தே கொல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தச் சம்பவம் கொழும்பில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

இந்திய்ட்டத்தின் ஒரு பகுதியாக அண்மையில் இராணுவக் கப்டன் தர்மசிறி நிஸங்க சிறையில் வைத்து தாக்கப்பட்டதாகவும் —

அதனால் இதுதொடர்பாக விசாரணை நிர்வாகம் எந்த நடவடிக்கையையும் எடுக்க விரும்பவில்லை என்றும் 'ஸிரி' குறிப்பிட்டுள்ளது. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

வடு ஏற்படைக்கு

1½ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் அமைந்த வீடு சுதுமலை தெற்கு மாளிப்பாயில் (ஏச்சாட்டி வைரவ கோயிலடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: சுகீன் லிமிரோர்ஸ் (இ. அரசரத்தினம்), சாவகச்சேரி சந்தை, ஆனைக் கோட்டை. (31683)

விதை தேவை

கல்தேக்(கத்தரிப்பு) விதை தேவை. மில்லைவிற். (சி 8567)

புலமைப்பரிசில் பயிற்சி

புலமைப் பரீட்சைக்கு ஏற்ற சிறந்த பயிற்சி நூலை புதிய கல்வி நிலையத்திலும், புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கம்: திரு. த. அம்பிகைபாகன். சொற்ப பிரதிகளே கையிருப்பு உண்டு. (31694)

கட்டுரை மலர்

கானத்துக்கு ஏற்ற வெளியீடு. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. சக்தி வானொலியின் மாணவர் கட்டுரை மலர் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் 6 ஆம், 7 ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உகந்தது. (31545)

புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். (7445)

ஆண்டு 5 புலமைப் பரிசில் தர்க்க மீட்டல் சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு நாட்களில் (மு. ப 9-00 – 12-00) (பி. ப. 2-00 – 5-00) நேரங்களில் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31693)

கலைஞர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 1 புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை சனி பிற்பகல் 3 மணிக்கு வழமையான இடத்தில் நடைபெறவுள்ளது. கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களைகலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (எ-5)

பலருடைய வேண்டுகோளின்படி "வரதர்" எழுதும் பாரதக் கதையின் மூன் கதைச் சுருக்கம் இந்த இதழில் வெளிவந்துள்ளது.

புதினம் 01-07-1994

விற்பனையாகிறது

[சி 8612]

நூலகர் தேவை

பத்திரிகை அலுவலகத்திற் நூலகத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கு அனுபவம் உடைய நூலகர் ஒருவர் தேவை.

ஆவணப்பிரிவு, உசாத்துணைப் பிரிவு, பதிவுகூறல் பிரிவு ஆகியவற்றினைக் கையாளக் கூடிய திறமையும், நூலக விஞ்ஞானத்தில் தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

முழுமையான சுய விவரங்களுடன் 07-07-1994க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

போட்டிப் பரீட்சைகளுக்கான

அஸ்ரன் வெளியீடுகள் விற்பனையாகின்றன

★ எழுதுவினைஞர் பரீட்சைக்கான பொதுவினாவேடமும் மொழித்திறனும் — 115/-

★ பயிலுநர், களிந, விஞ்ஞான ஆசிரியர் பரீட்சைக்கான பொது அறிவும் பொதுவினாவேடமும் —115/-

● எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

அஸ்ரன் பதிப்பகம்
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-8197]

யா / ஆவரங்கால்

நடராஜ இராமலிங்க வித்தியாலயம்-94

பரிசுத்தின அழைப்பு

இடம்: பாடசாலை கலையரங்கு
இன்று 01 – 07 – 1994 வெள்ளி
பிற்பகல் 5மணி

தலைவர்:
திரு. க. முத்துக்குமாரசுவாமி
(அதிபர்)

முதல்வமை விருந்தினர்:
திரு. இ. சிவானந்தன்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர் வலயம்-3)

சிறப்பு விருந்தினர்:
திரு. பொ. வீரபத்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)
திரு. அருண் மாஸ்டர்
(கல்வி மேம்பாட்டுப் பேரவை)

★ அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர் மாணவர்.

வாழ்த்துவோர்:
குகன் கல்வி நிறுவனம்
ஆவரங்கால்
[31691]

பருத்தித்துறை

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெரு விழாவின் அடையாளமாக

செயற்படுத்தும் பணிகள்

★ 01 - 07 - 1994 — காலை 8-15 மணி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பட சாலையில் சுவாமி சித்ருபானந்தாவின் பஜனை.
நூல்கள் அன்பளிப்பு.

★ 01 - 07 - 1994 — நண்பகல் 1 மணி. சாவகச்சேரி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு சுவாமி சித்ருபானந்தாவின் "விஞ்ஞானமும் சமயமும்" என்ற உரை.
நூல்கள் அன்பளிப்பு

★ 01 - 07 - 1994 — மாலை 5 மணி. சர்வோதயம் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி, ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஆகியன இணைந்து நடத்தும் கருத்தரங்கு. சுவாமி சித்ருபானந்தா கருத்தரங்கில் கலந்து கொள்வார்.
நூல்கள் அன்பளிப்பு.

★ 04 - 07 - 1994 — காலை 9 மணி. கோப்பாய் நாவலர் ஆரம்பப் பாடசாலையில் புத்தகக் கண்காட்சி; சுவாமி சித்ருபானந்தா பங்கு பற்றுவார்.
நூல்கள் அன்பளிப்பு.

★ 04 - 07 - 1994 — பிற்பகல் 3 மணி. பருத்தித்துறை நகர அதிபர் திரு. செல்வ நாயகம் அரியரட்னம் தலைமையில் சகல ஊழியர்களுக்கும் நூல் அன்பளிப்பு.

★ 06 - 07 - 1994 — புதன்கிழமை ஹாட்லிக் கல்லூரியில் ஸ்ரீ ராமகிருஷ்ண — விவேகானந்த புத்தகக் கண்காட்சி, அதிபர் திரு க. நடராசா புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.
நூல்கள் அன்பளிப்பு.

★ 08 - 07 - 1994 — காலை 8 மணி. இமையாணன் மகாவித்தியாலய அதிபர் திரு. ம. குட்டித்தம்பியிடம் சுவாமி விவேகானந்தரின் நூல்கள் கையளித்தல்.

★ 08 - 07 - 1994 — மாலை. சந்நிதி முருகன் கோயிலில் வழிபாடும் பஜனையும்: நூல்கள் அன்பளிப்பு.

★ 15 - 07 - 1994 — காலை 8 - 30 மணி. அரியாலை ஸ்ரீஸ்கோ வித்தியாலய சிறுவர் நூலகத்துக்கென அதிபர் திரு. இ. கணேசனிடம் நூல்கள் அன்பளிப்பு.

★ 15 - 07 - 1994 — சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்துக்கு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவப் படம் அன்பளிப்பு. மகா வித்தியாலய நிதி சேர்க்கும் வைபவத்துக்கு அன்பளிப்புச் செய்தல்.

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்துக்கென அதிபர் திரு. மு. பரமசுப்பிரமணியத்திடம் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் திருஉருவப்படத்தைக் கையளித்தல். நூல்கள் அன்பளிப்பு.

[சி-8573]

பாராட்டுகிறோம்

ஊரெழு - சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பா. ஸ்வத்திய நாதக்குருக்கள் அவர்களை இந்துசமயத்திற் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு கடந்த 11 - 06 - 1994 ஆம் திகதி கொழும்பில் நடத்திய சக்திப் பெருவிழாவில் "வேதாகம மாமணி" என்னும் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

வேதாகம மாமணி பட்டம் பெற்ற சிவஸ்ரீ. பா. ஸ்வத்தியநாதக் குருக்களின் சேவையை ஊரெழு -சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தான திருப்பணிச் சபையும், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையும் பாராட்டுகின்றன. (31695)

இணைப்பாளர்கள் தேவை

நல்லூர் யாழ். கோட்டை தவிபார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு இணைப்பாளர்கள் தேவை. தமிழில் பொதுக் கல்வித் தேர்வில், க. பொ. த (சாதாரண/ உயர்தர) வகுப்பில் சித்தியடைந்தவர்கள் 6 - 7 - 94 புதன்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பங்களை தவிபார் கல்வி நிர்வாகப் பிரிவு இல. 19, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பவும். தேர்முகப் பரீட்சை 8 - 7 - 94 வெள்ளிக்கிழமை மு. ப. 10 மணிக்கு அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால் தேவையான ஆவணங்களுடன் சமுகம் தரவும்;

யாழ் மாவட்ட
நிர்வாக இணைப்பாளர்.

(சி-8573)

இறுவில் கந்தசுவாமி கோயில்

18ஆம் திருவிழா

பகல் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இரவு 6-00மணிக்கு சுவாமி திருவீதி உலா வரும்.

விசேட நாதஸ்வர, தவில் கச்சேரிகள் நடைபெற்று

இரவு 8-00மணிக்கு

"இந்த மண் எங்களின் சொந்தமண்" புகழ்

S. G. சாந்தன் குழுவினரின்

மெல்லிசைப்பாடல்கள்

இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-18ஆம் திருவிழா உபயகாரர்:

(31689)

பெயர் மாற்றம்

புதிய ஈழம் நகை மாளிகை

என்ற பெயரில் இயங்கி வந்த எனது ஸ்தாபனம் இன்று 01 – 07 – 1994 முதல்

புவிதா நகைப் பூங்கா

என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனபதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்:
A R யோகேஸ்வரன்

91/1, (18), வெப். கேனக் இராதா தெரு,
யாழ்ப்பாணம். [31600]

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 — 10 — 1926

மறைவு: 01 — 07 — 1986

அமரர் சி. அழகரத்தினம்

(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)

'எட்டாண்டுகள் எட்டியதோ எங்களையா
எம்மை விட்டுப் பிரியாத வேந்தனே! காலமெல்லாம்
மூடும் கவலைகளைச் சுமந்தே வாழ்கின்றோம்
வெடும் இமையாய் எமைக்காப்பாய் நின்று''

அஞ்லி செய்யும்,
மனைவியும், மைந்தர்களும்.

சுதுமலை தெற்கு,
மாளிப்பாய்.

(31571)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும்-1994

1994-07-02 சனிக்கிழமை முற்பகல் 9மணி

பிரதம விருந்தினர்:
செல்வி தீலகவதி பெரியதம்பி அவர்கள்
(கல்விப் பணிப்பாளர் (வலயம்-1) யாழ்ப்பாணம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
வைத்தியகலாநிதி மயிலு கணேசரத்தினம் அவர்கள்
(சத்திரசிகிச்சை நிபுணர். யாழ். வைத்தியசாலை)

சிறப்பு விருந்தினர்:
திரு. சி. புலந்திரன் அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்டம்)

தலைவர்:
திரு. வி. மாணிக்கம் அவர்கள்
(பாடசாலை அதிபர்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்,
யாழ்ப்பாணம். [31692]

பரீட்சைகளுக்கு தயாராகும் மாணவர்களுக்காக

மலிவு விற்பனை 50 வீத தள்ளுபடி விலையில்

மாதிரி வினாத்தாள்கள் ▪ விடைகளுடன்

✻ புலமைப்பரிசில் பரீட்சை — 5ஆம் ஆண்டு
✻ 2ஆம் துவணைப் பரீட்சை — 3, 4, 5, 6, 7, 8, 9, 10ஆம் ஆண்டு
✻ முன்னோடிப் பரீட்சை — G. C. E. (O/L)
★ உயர்தரப் பரீட்சை — விஞ்ஞானம், வர்த்தகம், கலைப் பிரிவுகளுக்கான அனைத்து பாடங்களும்

01 - 07 - 94 முதல்
01 - 08 - 94 வரை மட்டும்

BOND கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம் (7491)

இதயம் நிறைந்த நன்றி

கடும் கவலையுடன் பாதிக்கப்பட்டிருந்த யாழ். திருச்சிலுவைக் கன்னியர் குருட்சகோதரி இனேயா சுவாமி அவர்களுக்கு உடல் நலத்தை அருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றோம். இவரின் உடல்நலம் தேறவேண்டுமென்பதற்காக இரவு பகலாக ! அரும்பாடுபட்டு, உழைத்த யாழ். போதனா வைத்தியசாலையின் அனைத்து வைத்தியர்களுக்கும், தாதிகளுக்கும் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றியைக் கூறுகின்றோம். இன்னும் இவரின் நலன் கருதி உடலாலும், உள்ளத்தாலும், செபத்தாலும் தவத்தாலும் (விஷேசமாக இரத்த தானம் வழங்கி) உதவி புரிந்த எமது ஆயருக்கும், குருக்களுக்கும், கன்னியர்களுக்கும், அருட்சகோதரர்களுக்கும் எம் நன்றியைக் கூறுகின்றோம். இன்னும் மேலாக பல பங்குக் கோயில்களிலும் ஒன்று கூடிசெபித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் அனைவரினதும் நன்றியைக் கூறி நிற்கின்றோம்.

நன்றி:

திருச்சிலுவைத் துறவிகள்,
திருச்சிலுவைக் கன்னியர் மடமும்,
வைத்தியசாலையும்.
கட்டிகரை வீதி,
யாழ்ப்பாணம்.

(7492)

சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

கொடியேற்றம்	–	03 – 07 – 1994
வேட்டை	–	11 – 07 – 1994
சப்பரம்	–	12 – 07 – 1994
தேர்	–	13 – 07 – 1994
தீர்த்தம்	–	14 – 07 – 1994
சங்காபிஷேகம்	–	22 – 07 – 1994

வாரீர்! வாரீர்!!

பழைமையில் புதுமைகான

வாரீர்! வாரீர்!!

தேர்த் திருப்பணிச்சபை

அடியார்களே!

எங்கள் பறாளாய்த் தேர் 300 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இப்பழைய தேரை பழைமையும் புதுமையும் ஒன்றிணைந்து புதுப்பொலிவும், புது அழகும் பெற, புனர்நிர்மாணம் செய்ய ஈசர விநாயகர் அருள்பாலித்துள்ளார்.

இதற்காகவே தேர்த்திருப்பணிச்சபையும் அமைக்கப்பட்டுள்ளது. 11 நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அடியார்களின் பண உதவியை நாடி நிற்கும்:
- தேர்த் திருப்பணிச்சபை.

விளம்பர அன்பளிப்பு:
சோழியபுரம் பத்ம வெளியீடு
[31696]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய உலக ஏற்பாடு இதுவா?

அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு- ஸ்ரீலங்கா— வந்துள்ளது.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு நிலவரத்தை அறிந்து கொள்வதே இந்த இராணுவக் குழுவின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது. அந்த வகையில் பிரதிநிதி குழுவடக்கு - கிழக்கின் யுத்த முனைகளுக்கும் விஜயம் செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கே வந்திருக்கும் இராணுவக் குழுவில், பசிபிக் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் விசேட செயற்பாட்டுக் கட்டளைப் பீடத்தின் உயர்மட்ட அதிகாரிகள் அங்கம் வகிக்கிறார்கள்.

அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகளின் இந்த விஜயம் உத்தியோகபூர்வ — வெளிப்படையான — பகிரங்கமான விஜயமாக அமையும் என்று எண்ணத் தோன்றவில்லை.

ஸ்ரீலங்கா அரசாங்கமும், அமெரிக்க அரசாங்கமும் அந்தரங்கமாக வைத்துக் கொண்டுள்ள விவகாரமாகவே இருக்கும் என்று நம்பலாம். இதற்கு முன்னரும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழுக்கள் பல இலங்கைக்கு வந்து திரும்பியிருக்கலாம்; யார் கண்டார்?

ஸ்ரீலங்கா ஜனாதிபதியும், அரசினரும் வடக்கு - கிழக்கு யுத்தத்தை உக்நாட்டு விவகாரம் என்று அடித்துக்கூறி வருகின்றனர். வெளிநாடுகளே, சண்டையை நிறுத்தி சமாதானத்தை உருவாக்க முன்வந்த போதெல்லாம் உக்நாட்டு விவகாரம் என்ற அணையப்போட்டுத்தடுத்து விட்டனர்; தடுத்து வருகின்றனர்.

அவ்வாறிருக்க வெளிநாட்டு இராணுவ, உயர் அதிகாரிகள் குழு யுத்த நிலைமையை, பாதுகாப்பு நிலைமையை அவதானிக்க இங்கு வருவது எப்படிப் பொருந்தும்? அதுவும் யுத்தமுனைக்கு வந்த நிலைமையை நேரில் பார்வையிடுவது என்பது சந்தேகத்தை மட்டுமன்றி மிகவும் பாரதூரமானதுமாகும்.

அமெரிக்க இராணுவத்தினர் இந்த விஜயம் ஸ்ரீலங்கா அரசு கூறிவரும் உக்நாட்டு விவகாரத்தில், அமெரிக்கா இராணுவ ரீதியில் தலையிடுவதற்கு ஒப்பானதாகும்.

சமாதானத்தை விரும்பாத, தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்த்துவைக்க விரும்பாத, தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாத ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பக்கம் நின்று அதற்கு உதவுவதைத்தவிர, அமெரிக்க இராணுவக் குழுவின் இலங்கை விஜயத்துக்கு வேறென்ன உள் நோக்கம் இருக்க முடியும்?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் — சமூகத் தமிழ் மக்களுக்கு எதிரான போரில் — ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உதவும் நற்சந்தர்ப்பமான - அந்தரங்கமான - நோக்கத்துடனேயே அமெரிக்க இராணுவக் குழு இங்கு வந்திருக்கிறது!

ஆசிய நாடு ஒன்றின் சிறு பான்மை இனம் ஒன்றின் நியாயமான உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கும், அந்த இன மக்களை அழிப்பதற்கும் "வல்லரசு" ஒன்று இவ்வாறு பகிரங்கமாக செயற்பட்டதற்கு முன்னுதாரணம் இல்லை!

உலகத்தில் வல்லாண்மைக் கொடுமுடி தானே என்றிமிருக்கின், அமெரிக்கா இப்படி ஒரு புதிய போக்கைக் கடைப்பிடிக்கப் போகிறதா? உலகில் தான் நினைத்த எதனைச் செய்வதையும் தடுத்துக்கேட்க எவரும் இல்லை என்ற இறுமாப்புடன் தனது சட்டாம்பிள்ளைத் தனத்தை நிறைவேற்ற உகந்த இடம் இலங்கைதான் என்று தெரிவு செய்துள்ளதா? அமெரிக்காவின் புதிய உலக ஒழுங்கு இதுதானோ!

ஜனநாயகம், மனித உரிமைகள், மக்கள் மேம்பாடு என்று வெளியே தேவாரம் பாடிக் கொண்டு, யாதான உலகத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிறோம் இடிப்பது தான் அமெரிக்காவின் பாரம்பரியமாக மாறப் போகிறதா? 215 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கா தனது சுதந்திரத்துக்குப் போராடியதை மறந்து, சுதந்திரப் போராட்டங்களை இவ்வாறு நசுக்க முயல்வது அதற்கே பொக்கான விலையைத் தேடிக் கொடுக்கும் என்பதனை மறந்துவிடக் கூடாது!

வருமான வேறுபாடு பாராது

சகல மாணவருக்கும் மேலதிக உணவு முத்திரை

வலிகாமம் மேற்கு, ஜூலை 1 வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டத்துக்குள் வராத— வருமானம் கூடிய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கும் இந்த ஆண்டில் இருந்து மாணவருக்கான மேலதிக உணவு முத்திரைகளை வழங்கும்படி வறுமை நிவாரண ஆணையாளர் சகல பிரதேச செயலர்களையும் பணித்துள்ளார்.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்று சகல பிரதேச செயலாளர்களுக்கும் வறுமை நிவாரண ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்தில் படி - இதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவானம் கூடிய மாணவர்களில் பயிலும் பாடசாலைகளில் அதிபர்களுடைய பொர்கடன் சமர்ப்பிக்கப்பட்டால் மேலதிக உணவு முத்திரைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (எ-175)

தொண்டர் நிறுவனங்கள் ஊடாக ஜனசவிய திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் அமுல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஜனசவிய நம்பிக்கை நிதியத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக யாழ். மாவட்டத்தில் செயற்படுத்தப்படவிருக்கின்றன.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாவிட்டபுரராசா கொழும்பிற் தரவிருந்த சமயம் இது தொடர்பாக ஜனசவிய நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் திரு. சரித்திரரத்வத்தையுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதனை அடுத்து இந்த அபிவிருத்தித் திட்டங்கள் இங்கு செயற்படுத்தப்படவிருக்கின்றன.

ஜனசவிய நம்பிக்கை நிதியத்தில் பங்காளர்களாக தம்மைப் பதிவு செய்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடி தங்கள் பிரதேசத்துக்கு ஏற்ற செயற்திட்டங்களுடன் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு யாழ். செயலகத்தில் நடக்கும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார் (எ-8)

கிராம உத்தியோகத்தர் புகுமுகப் பயிற்சி 3ஆம் திகதி

கடந்த 13 ஆம்திகதிநடந்த போட்டிப் பரீட்சையிற்தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு புகுமுகப் பயிற்சி எதிர்வரும் மூன்றாம்திகதி ஆரம்பமாகிறது.

யாழ்.செயலக திட்டமிடல் பகுதி இதற்கான ஒழுங்கு களைச் செய்துள்ளது.

மூன்று கட்டங்களாக இப் பயிற்சி இடம் பெறும்.

ஆரம்ப நாள் பயிற்சி யாழ் அரச அதிபர் திரு. கா. மாவிட்டபுரராசா தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஏனைய இரு கட்டப் பயிற்சிகளும் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது (இ-எ-161-175)

சுதேச மருத்துவ சங்கம் அரச அதிபருடன் சந்திப்பு

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையிலிருந்தும்—

கொழும்பு பல்கலைக்கழக ஆயுர்வேத துறையிலிருந்தும்— வெளியேறிய தமிழ் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குவது பற்றி ஆராயப்படுகின்றது.

இம் மாதம் 20ஆம் திகதி யாழ்; செயலகத்தில் அரச அதிபருடன் சுதேச மருத்துவ அபிவிருத்தி சங்கத்தினர் நடத்திய சந்திப்பின்போது இவ் விடயம் பற்றி ஆராயப் பட்டது.

இது குறித்த சுதேச வைத்திய அமைச்சுடனும், இணையாளருடனும் பேசி ஆவன செய்வதாக யாழ். அரச அதிபர் உறுதிவழங்கினார்.

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தின் மைதானம் ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது (இ-162)

ஈ. பி. டி. பி. இயக்கத்துக்கு 60 மீன்பிடிப் படகுகள் அரசாங்கம் வழங்குமாம்

கொழும்பு, ஜூலை 01

ஈ. பி. டி. பி. இயக்கத்துக்கு அறுபது மீன்பிடிப் படகுகளை வழங்க அரசாங்கம் நட்வடிக்கை எடுத்துள்ளதாக கூறிய, விற்று ஆகிய கிங்கனார இதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் பிரேமதாஸா ஜனாதிபதியாகிய காலத்திலேயே அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டதாகவும்

இப் படகுகளை ஈ. பி. டி. பி. க்கு வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமிட்டன் வனசிங்க, பாஸ்கரலிங்கம் ஆகியோர் தீவிர முயற்சி எடுத்து வந்தனர் என்றும்

தலா இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான இப் படகுகள் மக்கள் வங்கியின் கடனுதவி அடிப்படையில் ஊர்காவற்றுறையில் உள்ள மீனவர்களுக்கு ஈ. பி. டி. பி யினால் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் அவரது அரசுக்கு எதிர்வினை ஒழிப்பதற்கு ஈ. பி. டி. பி உதவியது என்றும் —

இதற்குப் பிரதியுபகாரமாகவே இப் படகுகளை வழங்க பிரேமதாஸா தீர்மானித்தார் என்றும் தரிக்கப்படுகிறது. (இ-9)

ரோஹணா விஜேவீராவின் மகள் தற்கொலை செய்ய முயற்சி!

குடும்பத்தவருக்கு மேற்குநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம்?

கொழும்பு, ஜூலை 1

நற்செய்தியை ஜ. தே. க. அரசினால் திருமலை கட்டிப் படைத்தளத்தில் நடுத்தவைக்கப்பட்டுள்ள திருமதி றோஹண விஜேவீராவும் அவரது பிள்ளைகளும் உள்வியல் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். விஜேவீராவின் 14 வயது மகள் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்."

— இவ்வாறு ஜே.வி.பியின் தகவல் வருக்கான மனித உரிமை அமைப்பின் செயலாளர் விரோமன் விக்கிரமசிங்கா மேற்கு நாடுகள் பலவற்றுக்கு அனுப்பிய எழுத்து மூல முறைப்பாடு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து —

ஜே. வி. பி. தலைவர் றோஹண விஜேவீராவின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் வெளிநாடு ஒன்றில் அரியல் தஞ்சம் அளிப்பது குறித்து குறிப்பிட்ட மேற்கு நாடு ஒன்றின் தகவல் நகரில் கடந்த வாரம் முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

விஜேவீர குடும்பத்தினரின் எதிர்காலம் குறித்து இங்கை அரசுடன் எந்த விதத்திலும் பேச்சு நடத்துவது என்பது குறித்து அப்போது ஆராயப் பட்டதாகவும் "தகவல் டேலீடர்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜே.வி.பியின் புதிய தலைமைத்துவத்துக்கு ஆதரவும் அனுதாபமும் பெறுவதற்கு விஜேவீராவின் குடும்பத்தினரை பயன்படுத்தத் திட்டமிட்டே, அவர்களுக்கு மேற்குலக நாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் பெற முயற்சிக்கப்படுவதாகவும் "தகவல் டேலீடர்" பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

1994 – 07 – 01
வெள்ளி இரவு

★ 8-01 — கரும் புலிகள் தினத்தை முன்விட்டு சிறப்பு நிகழ்ச்சி "கரும் புலிகள் கண மாடும் தேசம் [இது"
★ 8-20 — எழுச்சி கீதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் "கிழக்குத் திமோரை உலகம் மறந்து விடுமா?"
★ 8-50 — வாத்திய கானங்கள்

1994 – 07 – 02
சனி காலை

★ 7-02 — மாவீரகானங்கள்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 —செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7 40 — "நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

இன்று முதல்

உயர்தர மாணவருக்கான கருத்தரங்குகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட 1994ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்றுமுதல் நடைபெறுவன்ன. பிள் வருமாறு:

★ பிரயோக கணிதம் - 1 தரான கருத்தரங்கு இன்று யாழ். இந்துக் கல்லூரியிலும்—

★ இரசாயனவியல் பாடத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும்—

★ பிரயோக கணிதம்- 11தரான கருத்தரங்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் கடந்த ஆண்டுபரீட்சை விண்ணப்பங்களுடனே தாமாக அளித்த விடத்தே தொடர்புடன் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-5)

தைவல் பயிற்சி நிலையம் திறப்பு

சாவகச்சேரி, ஜூலை 1

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரி பிரிவால் தையல் பயிற்சி நிலையம் ஒன்று, இன்று வெள்ளிகிழமை 3-30 மணிக்கு வொடிகாமம் பிரதேச செயலகத்து அருகில் உள்ள நிலையத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-31)

தனக்குப் பின் ரணிலே ஜனாதிபதி என டி. பி. எப்போதும் கூறவில்லையாம்!

சமரசம் பேச வந்த அமைச்சரிடம் அவரே தகவல்

தமது பதவிக்காலத்தின் பின்னர் ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்காவே நியமிக்கப்படுவார் என்றும்—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றியீட்டியவுடன் அடுத்த பிரதமராகவும் ரணில் விக்கிரமசிங்காவே நியமிக்கப்படுவார் என்றும்—

தாம் ஒருபோதும் கூறவில்லை என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தற்போது தெரிவித்திருக்கிறார்.

சம்பத்தில் அனுராதபுரத்தில் நடந்த 'ஜ. தே. க. மாநாட்டில் டி. பி. விஜேதுங்கா முன்னுக்கு வாறு தெரிவித்தார் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு பிரதமர் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, காபந்து பிரதமராக வேறொருவர் நியமிக்கப்படலாம் என்ற நிலை அன்மையில் ஏற்பட்டது தெரிந்ததே.

இந்தச் சிக்கல் நிலையைத் தவிர்ப்பதற்காக அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஜனாதிபதியைச் சந்தித்து சமரசம் பேசினார்.

அனுராதபுரத்தில் ஜனாதிபதி கூறியதை, மீண்டும் கூறி ரணில் விக்கிரமசிங்கா கொண்டுள்ள அச்சத்தை நீக்கும்படி அப்போது டிரோன் பெர்னாண்டோ ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டாராம்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே டி. பி. விஜேதுங்கா "அனுராதபுரத்தில் அப்படி நான் பேசவில்லை. தேர்தலில் யார் வெற்றியீட்டுவர் என்பது தெரியாத நிலையில் அவரை நியமிப்பேன்; இவரை நியமிப்பேன் என்று நான் எப்படிக் கூறமுடியும்?" என்று திருப்பிக் கேட்டார் என்று "தகவல் டேலீடர்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

பிரமுகர்களின் உரைகளை தயாரிக்கும் கல்விமான்கள்

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள இச் சமயத்தில் அரசியல் பிரமுகர்கள் பலர் தமது முக்கிய உரைகளை கருத்தாழம் மிக்கவையாக வெளிப்படுத்துவதற்காக கல்விமான்களின் துணையை நாடியுள்ளனர்.

கொள்கை விளக்கம் சம்பந்தமான தமது உரைகளை கல்விமான்களைக் கொண்டே முக்கிய அரசியல் பிரமுகர்கள் தயாரித்து வருகின்றார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவரான சந்திரிகா குமாரணதுங்காவின் உரையை முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான ஜி. எச். பீரிஸ் தயாரித்து வருகிறார்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் முக்கிய உரைகளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தராக பேராசிரியர் நந்ததாஸ கொத்தலாவல தயாரித்து வருகிறார்.

தொழிலாளர் நிபுணர்களிக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி விஜேதுங்கா இன்று பேசவிருக்கிறார். அக் கூட்டத்தில் அவர் நிகழ்த்தவிருக்கும் உரையின் பிரதியை பேராசிரியர் நந்ததாஸ கொத்தலாவலே தயாரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

ஆலயங்களில்

வழக்கம்போல அம்மன் கொலுவில் சகல விசேஷம் இன்று வெள்ளி முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பகல் சங்காபிஷேகம் நடைபெற்று அன்னதானம் நடைபெறும். இரவு அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வருவார். (ஒ-28)

★ ★ ★

கொக்குவில் பொற்பதி வீதி புனித சின்னப்பர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு "இறைவனை அழைப்பவரே குமுவ வாரீரும்" எனும் பொருளில் அருட்திரு. ஜே. நீக்கிலஸ்—தும்—

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு "இறைவனின் திருவடிகளும் திரு இரத்தமும் குமுவ வாரீரின் திரு வாரீர்" எனும் பொருளில் அருட்திரு எ. ஜீவராபோலும் மறைஉரை நிகழ்த்துவார்கள்.

சனிக்கிழமை மாலை நற்கருணைப் பவனியும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். மானிப்பாய் கத்தோலிக்க வட்டாரத்துக்கு முதல்வர் அருள். ஜேம்ஸ் பத்திநாதர் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். (ஒ)

★ ★ ★

தெற்கு நாவலி - புனித இராயப்பர் - சின்னப்பர் தேவாலயத்தில் நாளை சனிக்கிழமை மடுமாதா திருநாள் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

இன்று வெள்ளிக்கிழமை — மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை சுற்றுப் பிரகாரம் இடம்பெறும்.

நாளை சனி காலை 7 மணிக்கு பங்குத்தந்தை வண. பொனிப்பாஸ் ஆடிகள் தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தலை அடுத்து மாயன்னையின் திருச்சொரூபத்தை பெண்கள் பவனி எடுத்துச்செல்வர். (எ-51)

இன்று

சந்நிதியான் ஆச்சிரம கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திரு. க. நவரத்னம் "பக்தி மலை" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு. ந. அமிர்தராஜி அறிமுகவுரையை ஆற்றுவார். (எ)

★ ★ ★

இன்று வெள்ளிக்கிழமை மாலை 10 மணிக்கு கழிபுரம் கபிலிருந்திச் சபை ஆயர் வேத வைத்திலிங்கம் மண்டபத்தில் மறைந்த வாதியார் கள் ஏ. மைலாசபிள்ளை வ. தங்கக்கனகபதி, க. கனகரத்தினம் ஆகியோரின் நினைவு படத்திறை நீக்கம் நடைபெறவுள்ளது. (ஒ-28)

★ ★ ★

வட்டுக்கோட்டை, சங்கானை பிரதேச சர்வோதய கிராமதான சங்கமகளிர் பயிற்சி மாணவர்களின் கைப்பணி கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை 9 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை நடைபெறும். (ஒ-161)

★ ★ ★

யாழ். கலப்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 25 வருடங்கள் ஆசிரியராகவும் பின்பு அதிபராகவும் சேவை புரிந்து வரும் திரு. ச. திருநாவுக்கரசின் சேவைகளைப் பாராட்டு முகமாக இன்று வெள்ளிக்கிழமை சேவை நலன் பாராட்டு விழா பாடசாலையில் நடைபெறுகிறது. (ஒ)

விளையாட்டு நிகழ்வுகள்

வல்வை ரேவடி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மெய்வல்லுநர் ஒலிம்பிக்ஸ் நாளையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் பிற்பகல் 2.30 மணிக்கு கழகத்தின் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. (எ-155)

★ ★ ★

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 2.30 மணி — பொற்பதி வி. க. எதிர் விநாயகர் வி.க.
★ 3.30 மணி —செஞ்சுடர் ஸ்ரீவி. க எதிர் கிங்ஸ்லிரார்வி வி. க.
★ 4.30 மணி — வடமராட்சி வி. க. எதிர் யங்றோயல் வி. க. (உ)

★ ★ ★

யாழ். கல்வி வலயம் 1இற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகும்.

நாடாளுமன்றத் தேர்தல் சு. க. வேட்பாளர் பட்டியல் வாரஇறுதியில் வெளியாகும்

சிறிமா ஞாயிறு கொழும்பு வருகிறார்

சுதந்திரக் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) சிங்கப்பூரில் இருந்து கொழும்பு திரும்புகின்றார்.

இருவாரங்களுக்கு முன்பு சிங்கப்பூர் மருத்துவமனை ஒன்றில் அவருக்குக் காலில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது தெரிந்ததே.

இதேவேளை —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தமது வேட்பாளர் பட்டியல்களை இவ்வார இறுதியில் அல்லது அடுத்தவார ஆரம்பத்தில் பூர்த்திபண்ணி விடும் என்றும் —

இதற்காக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்ன தெரிவித்தார்.

இதனிடையில் —

சுதந்திரக்கட்சி தேர்தல் செயலகம் ஒன்றை கட்சித் தலைமையகத்தில் திறந்துள்ளது. (எ)

கலப்பட நல்லெண்ணெய் சோதனையில் சிக்கியது!

சங்கானையில் சம்பவம்

சங்கானைப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் இருந்து கலப்படம் செய்யப்பட்ட 103 போத்தல் நல்லெண்ணெய்யை சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வட பிராந்திய உணவு, மருந்து பரிசோதகருக்கு கிடைத்த தகவலை அடுத்து, இத் திடீர் பரிசோதனை சங்கானையில் உள்ள கடைகளில் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதிகளில் நல்லெண்ணெய் விநியோகம் செய்து வந்த ஒருவர் வைத்திருந்த நல்லெண்ணெயை சுகாதார பரிசோதகர்கள் [சோதனை செய்தபோது அதில் தேங்காய்எண்ணெய் கலப்படம் செய்யப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

விசாரணையின் போது நல்லெண்ணெய்யுடன் தேங்காய் எண்ணெய்யைக் கலப்படம் செய்து விற்று வந்ததை அந்த வியாபாரி ஒப்புக்கொண்டார். அதனைத் தொடர்ந்து அவர் வைத்திருந்த 31 போத்தல் நல்லெண்ணெய்யும் கலப்படம் செய்யப்பட்ட எண்ணெய் என்று கூறி சுகாதார பரிசோதகர் முன்னிலையில் விநியோகிக்கப்பட்டது.

கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய் இருந்த போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த லேபல்களில் "இராசாயனப்பகுப் பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு சுத்தமென உறுதிப்படுத்தப் பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (162)

சீரான வாழ்வைச் சிதைத்திட எந்த சீதன அரக்கனைத் தீயிடு எரி [illegible]

எங்கள் மண்ணுக்காக போர் தொடுப்போம்
எங்கள் மண் வளம் காக்க மரங்களை நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைக் கலாமன்றம் கவின்கலைகள் பயிலகம்

வழங்கும்

இசைநிகழ்ச்சி

2 - 7 - 94 சனி மாலை 6.45 மணி
யாழ். பிரதான வீதி, மன்ற மாங்கு

நெறிப்புறுத்தினர்:-

வண. சாள்ஸ் கொலின்
டாக்டர் ஆ. ஸ்ரீபத்மநாதன்

பிரவேசம் இலவசம்

(பி/8576)

அதிர்ஷ்டலாபச் சீட்டு பரிசு பெற்றோர் விவரம்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவ மன்றத்தால் 30-6-94 அன்று நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பரிசு பெற்றோர் விபரம் பின்வருமாறு.

1 ஆம் பரிசு — 1498
2 ஆம் பரிசு — 5241
3 ஆம் பரிசு — 4216

ஆறுதல் பரிசு:

2196 793 51 9
755 5649

பரிசு பெற்றோர் தமது பரிசுகளை 30-7-94 இற்கெடையில் தமது சீட்டுக்களைச் சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்-கைதடியில் காண்பித்து பரிசில பெற்றுக் கொள்ளலாம்.

(31702) சித்த மருத்துவ மாணவர் மன்றத்தினர்

முக்கிய அறிவித்தல்

கல்வியங்காடு நல்லூர் வடக்கு அருள்மிகு இளவிளை நாகதி அம்பாள் ஆலய திருப்பணிச்சபை ஒன்று 22-8-93 தொடக்கம் இயங்குகின்றது. இவ் ஆலயத்தில் திருப்பணி செய்ய விரும்பும், நிதி உதவி செய்ய விரும்பும் அம்பாள் அடியார்கள். திருப்பணிச்சபைப் பொருளாளர் இ. சிவேந்திரராசா புதிய செம்மணி வீதி நல்லூர் வடக்கு என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்.
திருப்பணிச்சபை செயலாளர்
து. குணேந்திரா

(31703)

மரண அறிவித்தல்கள்

திருமதி வைத்திலிங்கம் வள்ளியம்மை

குரும்பசிட்டியைச் சேர்ந்த வை. வள்ளியம்மை 30 - 6 - 94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொ. வைத்திலிங்கத்தின் மனைவியும், சிவசோதி(அம்மா (சத்தேன்), இராசலக்கமி, சிவசக்தி, ஜெயலட்கமி, வசந்தி, சிவகப்பிரமணியம், செல்வக்கணேசன் ஆகியோரின் அன்புத்தாயாகும், தனபாலசுப்பிரமணியம், கிருஷ்ணசாமி, நந்தகுமார் ஆகியோரின் மாமியுமாவார்.

ஊரெழு தில்லைப் வீதியில் உள்ள இல்லத்தில் இன்று (1 - 7 - 94) காலை 9 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
வை, செல்வக்கணேசன்
(மகன்)

(31699)

செல்லையா ஸ்ரீமுருகன்
(நயினாதீவு)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா ஸ்ரீமுருகன் 28-6-94 அன்று நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - இராசாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், செல்வமலரின் அன்புக் கணவரும், திருமாறன், அஜந்தா, தர்சினி, கரிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. திருமதி விசுவலிங்கம் தம்பதிகளின் மூத்த மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-06-1994 அன்று நயினாதீவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சிவபாலன்
(சகலன்)
(யாழ். தகவல்)

59, சிவிவாசம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(31705)

இராசையா செல்வரத்தினம் (செல்வராசா)
(சோபிதா ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் ஆவரங்கால்)

இராசையா செல்வரத்தினம் 30-06-1994 இல் காலமானார்.

இவர் மனோன்மணி (மஞ்சுளா) யின் அன்புக் கணவரும், சர்மிலி, சோபிதா, தர்சினி, அரியவன், தீபிகா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சிற்றம்பலம் (துரைராசா), மல்லிகா (ரோசா) அவர்களின் மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (1-7-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூலவுடன் தகனம் செய்வதற்காக ஆவரங்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மஞ்சுளா
(மனைவி)
ஆவரங்கால்.

(31706)

இப்பத்திரிகை நிறு. உதயன் லிமிடெட் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/3 இல் அச்சிடுவிக்கப்பட்டு 01-07-1994 இல் வெளியிடப்பெற்றது.

எழுதுமட்டுவாழ் விழுபளை
அருள்மிகு
கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
வருடாந்த மகோற்சவம்

எதிர்வரும் 13 - 07 - 94 [29 ஆனி 1994] புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி
பரிபாலன சபையினரும்
உபயகாரர்களும்

பரிபாலன சபை,
எழுதுமட்டுவாழ்

(31700)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்நகர்.

96 A/L
CHEMISTRY
BY
திரு. மகாதேவா B.Sc

ஆரம்பம்:- **02-07-94 SATURDAY**
11.00 மணி
(சனி, ஞாயிற 11 00 — 12.00)

குறிப்பு:- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்வதும்.

(பி/8577)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் - யாழ். மாவட்டம்

உறுப்பினர் கவனத்திற்கு:

(1) 01-07-94 முதல் நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள் தங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும். (ஏற்கனவே கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது)

(2) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் ஜூலை 6 ஆம் திகதி முதல் செம்மணி வீதியிலுள்ள மாவட்ட காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(3) சந்தாப்பணம் செலுத்தாதவர்களின் மீது ஜூலை 10 ஆம் திகதி முதல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நிலுவைகளைப் பகுதியாகச் செலுத்தவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது

(4) தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு மேல் சமுகம் கொடுக்காதவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(5) ஜூலை 5 ஆம் திகதி பொது விடுமுறை தினமாகும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(பி/8579)

வேர்படி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
29 - 06 - 94 இல் நடைபெற்ற
சீட்டிழுப்பின் முடிவுகள்

			இலக்கம்
1ஆவது பரிசு	—	துவிச்சக்கரவண்டி	1949
2ஆவது பரிசு	—	வைரக்கடிகாரம்	3344
3ஆவது பரிசு	—	ரேடியோ	4192
4ஆவது பரிசு	—	சுவர்க்கடிகாரம்	5220
5ஆவது பரிசு	—	வெப்பக்குடுவை	9494

★ பரிசு பெற்றவர்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

★ 3 - 7 - 94 இல் நடைபெறவிருக்கும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் மதிய வாசா பற்றுச்சீட்டுக்களை 1-7-94 இற்கு முன்பாக பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்

(பி-8578)

COUNCIL OF NGOs JAFFNA

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
பதவி வெற்றிடம்

நிர்வாக அலுவலர்
(Administrative Officer)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு ஒரு நிர்வாக உத்தியோகத்தர் (Administrative Officer) தேவை.

வயது 30 — 45

கல்வித்தகைமை:
க. பொ. த. (உ. த) அல்லது சமமானது. குறைந்தது ரகுட நிர்வாகத் திறன், தகவல் பரிமாற்றம், கணக்கியல், அலுவலக ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம், தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய தேர்ச்சி முக்கியம்.

சம்பளம்: பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 -07- 1994

ICO, சீலன் வீதி,
(இராசாப் கோட்டம்)
யாழ்ப்பாணம்.

(பி/8574)

இன்னிசை நிகழ்ச்சி

வட்டு. ஒத்துர் கல்லூரி நிறுத்தவெளி ஆரங்கில் நாளை சனிக்கிழமை இரவு 7. 30 மணிக்கு இன்னிசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழகத்தின் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள், பாடகர்கள் ஒரே மேடையில் தோன்றும் நிகழ்ச்சி இது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

பாடசாலைகளில்

இமையாணன் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் திரு. ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும். முன்னாள் அதிபர் திரு. இ. வல்லிபுரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி இராசம்மா வல்லிபுரம் பரிசில்களை வழங்குவார். (ஒ 90)

★ ★ ★

வைத்தீஸ்வரா கல்லூரியின் ஆங்கில தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். பழைய ஆசிரியர் கல்லூரி முன்னாள் அதிபர் திரு ஆர். எஸ். நடராசாவும், திருமதி சிவயோகம் நடராசாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

பரீட்சை நிலைய மாற்றம்

நாளை சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரி பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ள சங்கீத, நடன, சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைமண்டபங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளன என்று யாழ் வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சங்கீத ஆசிரியர்களுக்கான பரீட்சை — திருக்குடும்ப கன்னியர்மடம்

நடன ஆசிரியர்களுக்கான பரீட்சை — கன்னியர்மடம் ம. வித். மண்டபம் 1:

சித்திரக்கலை ஆசிரியர்களுக்கான பரீட்சை — கன்னியர் மடம் ம. வித், மண்டபம் 02.

(ஒ)

குரக்கன் விதை கொள்வனவு

தென்மராட்சி, ஜூலை 1 தென்மராட்சிப் பகுதியில் குரக்கன் செய்கையாளரிடம் இருந்து குரக்கன் விதை பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பகமை நிலையத்தினால் கிலோ 26 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது. (எ-117)

ஜி. சீ. ஈ ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் உள்ள பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

ஜி சீ ஈ. உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து 24 ஆம் திகதி வரை நடத்த ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. (இ-ர)

திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானப் படையினரிடம் இருந்து ரி - 81 ரக துப்பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக் கூடுகள் 8, நடுத்தர ரவைகள் 240, ஏ கே. ரவைக் கூடு தாங்கி அணி ஒன்று, மழைக் கவசம் ஒன்று, துப்பாக்கி ஷெல்கள் 2, தண்ணீர் தாங்கி அணி ஒன்று என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதே போன்றதொரு நாசகுதல் கடந்த ஞாயிறு அன்றும் திருகோணமலையில் நடந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-162)

வேறு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் நிலைமைக் காரணமாக அங்கு வாக்களிக்க இயலாதுள்ளது என்ற நியாயமாக பயப்படுமிடத்து, இன்னொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க தன்னை அனுமதிக்கும் படி நியமன அறிவித்தல் திகதியில் இருந்து ஒரு வாரத்துக்குள் தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

Personal Class

இல 19. யாழ். வீதி,
யாழ்ப்பாணம்

A/L 96
கணக்கியல்

ஆரம்பம்: சனி
02-07-1994
பி. ப. 1-00 மணி

By
A. S. A.
கலைச்செல்வன்

(31697)

வலி. கிழக்கு வர்த்தகர் சங்கம்
வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்: 10 - 07 - 94 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3 மணி

இடம்: அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி பிரேரணைகள்:

6-7-94 இற்கு முன்னர் செயலாளருக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பல முக்கிய விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கப்படவிருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து வர்த்தகர்களையும் தவறாது வருகை தரும்படி அழைக்கின்றோம்.

அ. நாகேஸ்வரன்
செயலாளர்

(31701)

வாழ்த்துகிறோம்

பலாலி ஆசிரிய கலாசாலையின்
மூத்த கணித விரிவுரையாளர்
திருமதி த. அரிராஜசிங்கம்
அவர்கள்

பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபராக பதவியேற்றதையிட்டு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரின் சேவை இனிதே தொடர இறைவனை வேண்டுகிறோம்.

கணித மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(31698)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அமரர்
ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி B.A.
(ஆசிரியை, யா/ மண்டையர்கரசி வித்தியாலயம்)

அன்புடையீர்!

எமது குடும்பத்தின் அன்பு மகளாய் வாழ்ந்த, 03 - 06 - 1994 அன்று இயற்கை பெற்ற எங்கள் "ஞானா" வின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 04 - 07 - 1994 (இங்கள்) முற்பகல் 10-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

● தயவு செய்து இவ் அழைப்பினைத் தனித்தனி அழைப்பாக ஏற்குமாறும் வேண்டுகிறோம்.

தாயார், கணவர், மாமன், மாமி,
சகோதரர், மைத்துனர்
மக்கள், மருமக்கள்.

"அம்பாள் அகம்"
மருதனார்மடம்,
இணுவில்.

[பி-8575]

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
அமைய சுகாதாரத் தொழிலாளர் பதவிகள் வெற்றிடம்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 - 07 - 1994 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற் சொல்லப்படும் தகைமையைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் இவ்வலுவலகத்தில் அதற்குரிய படிவங்களைப் பெற்று தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. ஆகக்குறைந்தது 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. வயது 18 இற்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. நல்ல ஆரோக்கியமும், நன்நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மாவும் 15 - 07 - 1994 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபாலூடாக "விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கன்னாகம்" என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறித்த திகதிக்குப்பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
கன்னாகம்:
28-06-1994

(பி/5710)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org